*15 ஜூன், 2015*

## வைரத்தைப் பார்ப்பது

தாதி எப்போதும் என்னில், என்னுடைய இதயத்தில் சரியானவற்றைப் பார்க்கும் திறமையைக் கொண்டிருக்கின்றார். அவர் என்னுடைய தாயார் காட்டிய புகைப்படத்தின் மூலமாக முதலில் என்னைப் பார்த்தார். தாதி அப்புகைப்படத்தைப் பார்த்து மதுபனுக்கு அழைத்து வருமாறு கூறினார். ஒவ்வொரு முறையும் என் அம்மா தாதியைச் சந்திக்கும்போது அல்லது என் அம்மா மதுபன் சென்ற ஒவ்வொரு முறையும் என்னுடைய படத்தை என் தாயார் தாதியிடம் காண்பித்து என்னைப் பற்றிக் கூறுவார். பின்னாளில் தாதி எங்கள் மையத்தை விஜயம் செய்தப் போது நாங்கள் நேருக்கு நேர்ச் சந்திக்கும் சமயமாக இருந்தது. அவர் தனித்துவமான, வெட்டப்படாத, தீட்டப்படாத வைரத்தை ஓர் இரத்தின வியாபாரிப் பார்ப்பது போல் என்னைப் பார்த்தார். அவரது ஆழ்ந்த அன்பான பார்வை என் குறைபாடுககளைக் களைந்ததில் எனக்கு அப்பார்வைச் சுயத்தின் மீது நம்பிக்கை அளித்தது.

தாதியின் குறைபாடற்ற அந்தப் பார்வை இல்லாதிருந்தால், நான் இங்கே ஒரு நோக்கம் நிறைந்த வைரம் போன்ற வாழ்கையை வாழ்ந்துக் கொண்டிருப்பதையும்; கடவுளக்கான அன்பான வாழ்க்கையையும்; இரக்கமான வாழ்க்கையையும் நான் கொண்டிருப்பேன் என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை.

தாதியின் பல வாழ்க்கைகளில், இந்த விலைமதிப்பற்ற வாழ்நாளின் 100 வது ஆண்டில் தாதியிடம் "குறைபாடற்ற பார்வைக்கு நன்றி" என்று சாதாரணமாகக் கூறுகின்றேன்.

### விவேகம் நிறைந்த வார்த்தைகள்:

ஒரு குறைபாடற்ற வைரம் ஆகுவதற்கு மற்றவர்களைப் பார்க்கும் பழக்கத்தை விட்டுவிட வேண்டும். ஒரு வைரம் வேறு யாரையும் பார்க்க வேண்டிய அவசியமில்லை. வைரங்களாகிய நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்டவர்கள், மற்றவர்களிலிருந்து பிரிந்திருப்பவர்கள், அதனால் நம்மை நாம் பார்க்க வேண்டும். ஆத்ம-உணர்வு நிலையில், பாபாவைத் தவிர வேறு யாரையும் பார்க்காதவாறு பாபாவுடன் ஆழமான உறவை உருவாக்குங்கள். பகுத்தறியும் சக்தி மூலம் ஒருவர் வைரமாகின்றார். வைரமாக ஆக விரும்புபவர் அனைத்துக் குறைபாடுகளையும் நீக்குவதில் கவனத்துடன் இருப்பார் - ஒரு குறைபாடுக் கூட இருக்கக் கூடாது. என்னுடைய எண்ணங்கள் சுத்தமாகவும் அமைதியாகவும் இருக்க வேண்டும். பாபாவின் நினைவில், அப்படிப்பட்ட ஓர் ஆத்மா ஒளி வடிவமாகி சக்தியை உள் இழுக்கின்றது. ஒரு வருடத்தில் 365 நாட்கள் உள்ளன. ஒவ்வொரு நாளும் நான் என்னையே கேட்பேன் 'நான் ஏன் பாபாவிடம் வந்திருக்கின்றேன்? என்னுடைய வாழ்கையின் நோக்கம் என்ன? என்னுடைய வாழ்க்கை பாபாவிடமிருந்து சக்தியை எடுத்து மற்றவர்களுக்கு ஒளியைக் கொடுப்பதாகும். மற்றவர்கள் நம் சேவை மற்றும் நம் நிலையின் மூலமாக ஒளியைப் பெற வேண்டும். உங்கள் வாழ்க்கை எவ்வாறு

இருக்க வேண்டும் எனக் காட்சியாகப் பாருங்கள். உங்களுக்குள் ஆழமான சுட்சுமமான முறையில் பணியாற்றுங்கள்.

உலகம் துயரத்தில் உள்ளது. காலம் அழைக்கின்றது. நாம் இப்பொழுது தந்தையிடமிருந்து அடைந்த அனைத்தையும் மற்றவர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும். தந்தையிடமிருந்து அமைதி மற்றும் அன்பு அலைகளின் அனுபவத்தை மற்றவர்களுக்கு ஆதியான நிலையின் அனுபவத்தின் மூலம் கொடுக்கவும். தந்தைக்குச் சமமாக இருங்கள், அதனால் தந்தையைத் தவிர எதுவும் புலப்படாது.

திருஷ்டிக்கான கருத்து:

நான் என்னுடைய தினசரி நோக்கம் நிறைந்த வாழ்க்கையைக் கடவுளின் அன்பில் நான் வாழும்போது, என்னுடைய பார்வையானது ஒவ்வொருவரின் உள்ளும் இருக்கின்ற குறைபாடற்ற வைரத்தின் மீது விழ நான் அனுமதிக்கின்றேன். மேலும் ஒவ்வொருவரிடம் உள்ள மைய மற்றும் சாராம்சத்தைச் சரியாகப் பார்க்கும் என்னுடைய திறமையின் மூலமாக நான் அவர்களிடம் அவர்களுடைய ஆதியான நிலையில் அவர்களும் குறைபாடற்றவர்கள் என்ற நம்பிக்கையை நிரப்புகின்றேன்.

கர்மயோக கருத்து

நான் நகர்ந்து கொண்டு, என்னுடைய அன்றாடப் பணிகளை நிறைவேற்றும் அதே வேளையில் நான் அனைத்து சக்திகள் மற்றும் ஒளியின் ஆதாரத்தின் தொடர்பில் இணைக்கப்பட்டு இருக்கின்றேன். நான் ஒளி, நான் அன்பு, நான் அமைதி ஆவேன்.